

முதலமைச்சர் தளபதி முகஸ்டாலின் அவர்கள் புதிய பள்ளி வகுப்புகளை காணொளிகாட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா வன்னிவேடு அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி கட்டிடத்தை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜே.யு.சந்திரகலா, ஊராட்சி மன்ற தலைவர் கற்பகராணி சக்திவேல்குமார், பெற்றோர் ஆசிரியர் கழகதலைவர் வன்னிவேடு சி.சக்திவேல் குமார், பொறுப்பு தலைமை ஆசிரியர் மு.சதீஷ்குமார், மற்றும் அனைத்து ஆசிரியர்கள் மாணவர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அனைத்து பொது போக்குவரத்துகளையும் இணைக்கும் வகையில்

# ஒரே டிக்கெட்டில் பயணம் செய்யும் 'சென்னை ஒன்' செயலி திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்!

**சென்னை, செப்.22 -**

**சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பின் (CUMTA) சார்பில் இந்தியாவிலேயே முதன்முறையாக பேருந்து, புறநகர் ரயில், மெட்ரோ ரயில் மற்றும் கேப் / ஆட்டோக்கள் போன்ற அனைத்து பொது போக்குவரத்துகளையும் இணைக்கும் வகையில் ஒரே QR பயணச்சீட்டு மூலம் ஐ.ஓ.எஸ் மற்றும் ஆண்ட்ராய்டு தளங்களில் செயல்படக்கூடிய "சென்னை ஒன்று மொபைல் செயலி" யை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (22.9.2025) தொடங்கி வைக்கிறார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில், சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பின் (CUMTA) 2வது ஆணையக் கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சென்னைப் பெருநகரப் பகுதிக்கான 25 ஆண்டுகளுக்கான போக்கு வரத்து திட்ட த்திற்கு ஒப்புதல் அளிப்பதுடன் சென்னை பெருநகருக்கான ஒருங்கிணைந்த QR (Quick Response) பயணச்சீட்டு மற்றும் பயணத் திட்டமிடல் செயலியை இன்று (22.9.2025) தொடங்கி வைக்கவுள்ளார்.

சென்னைப் பெருநகரப் பகுதிக்கான (5,904 சதுர கி.மீ) விரிவான போக்குவரத்து திட்டம் (Comprehensive Mobility Plan) 2023-2048, "மக்களும் பொருட்களும் தங்கு தடையின்றி ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு செல்வதை உறுதி செய்யும் வகையில் ஒருங்கிணைந்த, நிலையான, பாதுகாப்பான மற்றும் நெகிழ்வான போக்குவரத்து சுற்றுச்சூழல் அமைப்பை ஏற்படுத்துதல்" என்ற தொலைநோக்குப் பார்வையுடன், நகர்ப்புற போக்குவரத்து முயற்சிகளை முன்னெடுத்து செல்வதற்காக அமைகிறது.

விரிவான போக்குவரத்து திட்டம் மூலம் பயண நேரத்தை மற்றும் பயண செலவைக் குறைத்தல், நம்பகமான, விரைவான பொதுப் போக்குவரத்தை வழங்குதல், பல்வகை பொது போக்குவரத்தை ஒருங்கிணைத்து வலுப்படுத்துதல், குறைந்த போக்குவரத்து உமிழ்வு மற்றும் பயணத் தேவை மேலாண்மையை ஊக்குவித்தல் போன்றவை கண்காணிக்கப்பட்டு செயல்படுத்தப்படவுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முறையாக அனைத்து பொது போக்குவரத்தையும் இணைக்கும் வகையில் ஐ.ஓ.எஸ் மற்றும் ஆண்ட்ராய்டு தளங்களில் செயல்படக்கூடிய "சென்னை ஒன்று (CHENNAI ONE) மொபைல் செயலியை" முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (22.9.2025) தொடங்கி வைக்கிறார்.

இந்த செயலி பேருந்து, புறநகர் ரயில், மெட்ரோ ரயில் மற்றும் கேப் / ஆட்டோக்களை ஒரே QR பயணச்சீட்டு மூலம் ஒருங்கிணைக்கிறது.

இதன்மூலம் பொதுமக்கள் பேருந்துகள், மெட்ரோ மற்றும் புறநகர் ரயில்களின் நிகழ்நேர இயக்கத்தை அறிந்து கொள்ளவும், UPI அல்லது கட்டண அட்டைகள் வழியாக பயணச் சீட்டுகளை பெற்றிடவும்,

ஒரே பயணப் பதிவின் மூலம் அனைத்து போக்குவரத்து முறைகளிலும் பயணம் செய்யவும் முடியும். இச்செயலி ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம் என பல மொழிகளில் மக்கள் பயன்படுத்திடும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

"சென்னை ஒன்று செயலி" பொது போக்குவரத்து சேவையில் ஒரு முக்கியமான முன்னெடுப்பாகும். இனி பொதுமக்கள் பயணச் சீட்டு பெற வரிசையில் காத்திருக்க தேவையில்லை. இந்த செயலி மூலம் எளிதாக கட்டணம் செலுத்தி பயணச் சீட்டை பெற்று பயணம் செய்யலாம்.



விழுப்புரம் மாவட்டம் மயிலம்ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் ரூ 2.00 கோடி மதிப்பீட்டில் புதிய ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய்யம் கட்டிடம் கட்டும் பணியினை முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன்,மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர்குமாரி ஆனந்தி, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், ஒன்றிய செயலாளர் மணிமாறன், உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள், திமுக நிர்வாகிகள் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி முகஸ்டாலின் அவர்கள் பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற விழாவில் புதிய பள்ளிக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, பள்ளிக் கட்டடங்களை திறந்து வைத்ததை தொடர்ந்து திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள புதிய வகுப்பறை கட்டிடத்தை மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி கலந்து கொண்டுதிறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ஆ.சம்பத்குமார், ஜோலார்பேட்டை நகர செயலாளர் ம.அன்பழகன், நகர மன்ற தலைவர் காவியாவிக்டர், நகர மன்ற துணைதலைவர் இந்திரா பெரியார்தாசன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பி.சுதா, நகர கழக நிர்வாகிகள் பாஸ்கர், சம்பத், வசந்தகுமார், சுரேஷ் மற்றும் வார்டு நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், அரசு துறை அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – நாளை

# தி.மு.க. மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம்!

## பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், தி.மு.க. மக்களவை -மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், நாளை (23.09.2025 - செவ்வாய்க்கிழமை), காலை 10.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கத்தில் நடைபெறும்.

அதுபோது, தி.மு.க. மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18.
நாள் : 21.09.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### செம்பரம்பாக்கத்தில் இருந்து நாளொன்றுக்கு கூடுதலாக விநியோகம் செய்யப்படும்!

# 265 மில்லியன் லிட்டர் குடிநீர் மூலம் சென்னையில் 20 லட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் பெருமிதம்!

**சென்னை,செப்.22-**

**செம்பரம்பாக்கத்தில் இருந்து நாளொன்றுக்கு கூடுதலாக விநியோகம் செய்யப்படும் 265 மில்லியன் லிட்டர் குடிநீர் மூலம் சென்னையில் 20 லட்சம் மக்கள் பயன்பெறுவார்கள் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவில்,

அனைவருக்கும் தரமான குடிநீர் என சொன்னோம்... செய்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளார். செம்பரம்பாக்கத்தில் இருந்து, சென்னை மாநகருக்கு நாளொன்றுக்குக் கூடுதலாக 265 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகத்தை, தான் தொடங்கி வைத்ததாக தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள்,

இதனால், சென்னையின் அம்பத்தூர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், வளசரவாக்கம், ஆலந்தூர், அடையார் மண்டலங்கள், தாம்பரம் மாநகராட்சியின் குன்றத்தூர் மற்றும் திருப்பெரும்புதூர் நகராட்சிகளில் உள்ள 20 இலட்சம் பொதுமக்கள் பயன்பெற உள்ளதாகவும் பதிவிட்டுள்ளார். மேலும், இது தொடர்பான வீடியோவையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பகிர்ந்துள்ளார்.

இதற்கிடையே, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள மற்றொரு சமூக வலைதளப் பதிவில், சென்னை மெட்ரோ வாட்டர் தொடர்பான அனைத்துப் புகார்களையும் எளிமையாகப் பதிவு செய்ய 'சென்னை குடிநீர் செயலி' எனும் புதிய Mobile App அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். புகைப்படம் மற்றும் location ஐ இணைத்துப் புகார் தெரிவித்தால், உரிய காலத்தில் உதவிப் பொறியாளர் மூலம் தீர்வு காணப்படும் என்றும், இல்லையெனில், 48 மணி நேரத்தில் உயர் அலுவலருக்குப் புகாரளிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். திராவிட மாடல் என்பது மக்களை மையப்படுத்திய, தீர்வுகளை நோக்கிய நிர்வாகம் என்றும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

### மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தலைமை! டாக்டர் எழிலன் நாகநாதன் சிறப்புரை!

# வேலூரில் ஓரணியில் தமிழ்நாடு மாபெரும் பொதுக்கூட்டம்!

### அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி – டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. – ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

வேலூர், செப்.22-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க வேலூர் மாவட்ட திமுக சார்பில் தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டேன் பொதுக்கூட்டம் அண்ணா கலையரங்கம் அருகில் நடந்தது. நிகழ்ச்சிக்கு வேலூர் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்எல்ஏ , தலைமை தாங்கினார்.

மாவட்ட அவைத்தலைவர் கழக தணிக்கை குழு உறுப்பினர் தி.அ.முகமது சகி மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ப. கார்த்திகேயன் ஆகியோர் அனைவரையும் வரவேற்று பேசினார்கள்.

மாவட்ட துணை செயலாளர்கள் ஜி.எஸ். அரசு எம்.பிரபாத்குமார் மலர்விழி லோகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழக மாநில மருத்துவர் அணி செயலாளர் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், சிறப்புரை ஆற்றினார்.

அவர் பேசியதாவது:

திமுக மேடை தான் சமத்துவத்தையும் சமூக நீதியையும் கற்றுக் கொடுத்தது நீட் இல்லாமல் தலைசிறந்த மருத்துவர்களை உருவாக்கியவர் அப்போதைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி ,சமூக நீதிக் கொள்கைகள் தான் ஏராளமான மருத்துவர்களை உருவாக்கியது .சாமானியனையும் மருத்துவம் படிக்க வைத்தவர் அவர்.

ஆனால் தற்போது சாமானியன் மருத்துவராக முடியுமா நீட் தேர்வை கொண்டு வந்து தேசிய கல்விக் கொள்கை மூலம் குலகல்வியை திணிக்க பார்க்கிறார்கள் இதை எதிர்த்து மத்திய அரசை கேள்வி கேட்பவர் தான் நமது முதலமைச்சர் கீழடி அறிக்கை, நீட்விலக்கு, தேசிய கல்விக் கொள்கை எதிர்ப்பு போன்ற இவற்றில் ஏதற்காவதாவது எடப்பாடி பழனிச்சாமி குரல் கொடுத்து உள்ளாரா?

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தமிழ்நாட்டை என்றும் தலைகுனிய விட மாட்டார். தமிழ்நாடு அமைதியாக இருப்பதால் தான் வெளிநாட்டினர் தமிழகத்தில் முதலீடு செய்து தொழில் தொடங்க ஆர்வம் காட்டுகிறார்கள் . அமைதியான ஆட்சி தான் திராவிட மாடல் ஆட்சி என்பதற்கு இதுவே சாட்சி .

இவ்வாறு அவர் பேசினார். தொடர்ந்து தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டேன் என்ற உறுதி மொழியை கழக நிர்வாகிகள் ஏற்றுக் கொண்டனர்.

கூட்டத்தில் அமைப்பு சாரா ஓட்டுனர் அணி தலைவர் வேலூர் நாடாளு மன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் ,மாநில மகளிர்பிரச்சார குழு செயலாளர் குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலு விஜயன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம். சுனில்குமார் தலைமைக்கழக நிர்வாகிகள் முன்னாள் அமைச்சர் டாக்டர் வி .எஸ் .விஜய், முன்னாள் எம்.எல்.ஏ.கள் சி.ஞான சேகரன், மற்றும் வேலூர் ஜி.ரமேஷ் சேர்க்காடு டி.கென்னடி, என் சுப்பிர மணி, மாநில அணிகளின் துணை செயலாளர்கள் எம்நூருல்லா, டாக்டர் ராஜேஸ்வரி மோகன்காந்தி, சி.கோபி பிரம்ம புரம்பழனி தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.பி.ஏழுமலை, ஏ.ஜி.ஆறுமுகம், வி.கே.ஆர். சுந்தர வடிவேலு, டி.விஜயகுமார், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் வி.தயாநிதி, எஸ். கதிரேசன், சி. மணிமாறன், மா.ப. அன்புநிதி, ஜி.லோகநாதன் வி.டி. சிவகுமார் ,கே .கண்ணன் ஆலியார் ஹர்ஷத் அகமத் ,எஸ்.பி. சக்தி தாசன் , கே . தயாளமூர்த்தி சி.சந்திரசேகரன், எஸ். சுஜாதா, த.புவியரசி, ஒன்றிய கழக செயலாளர்கள் சி.எல். ஞானசேகரன், எல். ரவிச்சந்திரன் , என்.இ. சத்யானந்தம் ,கோ.குமார பாண்டியன் ,

பி.வெங்கடேசன், எஸ். சரவணன், கே.சீதாராமன் , கே.ஜனார்த்தனன் என். கஜேந்திரன், கே.ரவி, அ. அன்பரசன், எம் .டேவிட் , ஆர் .முருகேசன், கே .கருணாகரன் , எஸ் .தணிகாசலம் சி.ரவி ஏ. கே. முருகன், எம்.டி. சீனிவாசன்,

நகரக் கழக செயலாளர்கள் எஸ். சௌந்தரராஜன், ஆலியார் ஜுபேர்அஹமத்,

மாநகர நிர்வாகிகள் கோவிந்தன் என்ற சூரி , ஏ.ஆர்.முன்னா ஷெரீப், ஓய். தேவநேசன் , ஆர்.தங்கமணி, நா.அசோகன், பகுதி கழக செயலாளர்கள் ஜி.வன்னியராஜா, என்.பரமசிவம் , ஆர்.பி.இ. சசிகுமார், எம்.ஏ.கணேஷ் சங்கர், எஸ்.தயாள்ராஜ், வி.ஜி கே சுந்தர விஜி. கே. சத்தியமூர்த்தி ஜி.பால முரளி கிருஷ்ணா, சி.எம். தங்கதுரை, ஆர்.கே.ஐயப்பன் தி.அ.முனவர் பாஷா, மண்டல குழு தலைவர்கள் புஷ்பலதா வன்னியராஜா, வீனஸ் ஆர்.நரேந்திரன் , வெங்கடேசன், யூசுப் கான் ,பேரூர் கழக செயலாளர்கள் தி.மு.ஜாகீர் உசேன் , ஆர்.பெருமாள் ராஜா,கே. நேரு , பி.அருள்நாதன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் க.ராஜா மார்த்தாண்டன், பி.எம். தேவராஜ், ஜி. முருகானந்தம் கே.வாசுகி , எஸ்.பரிமளம், டி.என். பைரோஸ், ஏ.எஸ் அரிகிருஷ்ணன், ஜெ.திவாகர், சி.எம்.தம்பிதுரை, எம்.இ கோவிந்தராஜ் , வி.கிருபாகரன், எஸ்.கே.விநாயகம் சி.என்.பாபு , கே.ஆர். அசோக், டாக்டர் எஸ். நந்தகுமார், எஸ்.தௌபிக் அகமத்,ஆர்.ஜி. தர்மராஜ் , எம். மஞ்சுளா, எஸ். வெங்கடேசன், கே.புவனேஷ் குமார், பூஞ்சோலை சீனிவாசன், டி.லோகநாதன், கே.ஆர். செல்வம், வள்ளிமலை ஊராட்சி மன்ற தலைவர் வாசுகி ஆகியோர் கலந்து கொண்டனர்.

முடிவில் சேண்பாக்கம் பகுதி கழக செயலாளர் பி. முருகப்பெருமாள் நன்றி கூறினார்.



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், புதூர் ஊராட்சி ஒன்றியம், பூதலப்புரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.1கோடியே 12லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கூடுதல் கட்டிடப் பணிகளையும், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் HCL நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியின் கீழ் சுற்றுச்சுவர் அமைக்கும் பணியை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்கண்டேயன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் புதூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் செல்வராஜ், விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.